# பரீட்சகரின் அறிக்கை

**மட்டம் III பரீட்சை – 2022 சனவரி**

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

(303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும் வினாத்தாளானது 9 கட்டாய வினாக்களைக் கொண்டுள்ளது. இந்த வினாத்தாளில் 3 பகுதிகள் காணப்படுகின்றன. பகுதி A ஆனது ஒவ்வொன்றும் 5 புள்ளிகளைக் கொண்ட 4 கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளதுடன் பகுதி B ஆனது ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட 3 கட்டாய வினாக்களையும் பகுதி C ஆனது ஒவ்வொன்றும் 25 புள்ளிகளைக் கொண்ட 2 கட்டாய வினாக்களையும் உள்ளடக்கியுள்ளது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாத்தாளில் தரப்பட்ட சகல வினாக்களுக்கும் விடை அளித்திருந்தனர். எவ்வாறாயினும், விடையளிக்கப்படாதிருந்த வினாக்களின் சில பகுதிகளும் காணப்பட்டன. இது பிரதானமாக மோசமான நேர முகாமைத்துவம், போதிய அறிவின்மை மற்றும் வினாவில் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளாமை போன்றவற்றால் ஏற்பட்டதாகும்.
**ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

### <u>பகுதி A</u>

### வினா இல. 01

வினாவின் **பகுதி (a)** ஆனது சிறந்த நிறுவன ஆளுகை முறைமையிலிருந்து கம்பனியொன்று பெறக்கூடிய மூன்று அனுகூலங்களை இனங்காணுமாறு கேட்டிருந்ததுடன் **பகுதி (b)** ஆனது நிறுவன ஆளுகைச் சட்டகத்தில் காணப்படுகின்ற நிறுவனக் கட்டமைப்பு தவிர்ந்த வேறு இரண்டு பாகங்களைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. வினாவின் இரண்டு பகுதிகளும் நேரடியான வினாக்களாக இருப்பதுடன் நேரடியான விடைகள் எதிர்பார்க்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இவற்றுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டன. நிறுவன ஆளுகை பற்றிய தெளிவான புரிதலைக் கொண்டிருந்த சில மாணவர்கள் முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் நிறுவன ஆளுகை பற்றிய பொதுவான விளக்கத்தைக் கொண்டிருக்காத காரணத்தால் **பகுதி (a)** இற்கு மிகச் சில புள்ளிகளையே பெற்றுக் கொண்டனர்.

**பகுதி (b)** இற்கு, சில பரீட்சார்த்திகள் நிறுவனக் கட்டமைப்பை மீளவும் எழுதியிருந்ததால் எவ்வித புள்ளிகளையும் பெறவில்லை. இது வினாவைக் கவனமாக வாசிக்காததைக் காட்டுகிறது.

**பகுதி (b)** இற்கு பரீட்சார்த்திகளால் அளிக்கப்பட்ட சில சம்பந்தமற்ற விடைகள் கீழே தரப்பட்டுள்ளன:

- நிதிக் கட்டமைப்பு
- மனித வள முகாமைத்துவம்
- வெளிப்படைத்தன்மை
- உள்ளகக் கட்டுப்பாடு

பரீட்சார்த்திகள் திருப்திகரமான புள்ளிகளை பெற்றுக் கொள்வதற்கு கீழ்வரும் பாடப் பரப்புகளில் விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள ஆலோசனை வழங்கப்படுகிறது :

1. நிறுவன ஆளுகையின் பாகங்கள்
2. நிறுவன ஆளுகைக் கோட்பாடுகளும் அனுகூலங்களும்
3. பணிப்பாளர்கள் சபையின் வகிபாகமும் கணக்காய்வுக் குழுவின் தொழிற்பாடுகளும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 02**

நிறுவனமொன்று எதிர்கொள்கின்ற உள்ளக இடர்களை உதாரணங்களுடன் விபரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது.

வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நிறுவனமொன்று எதிர்கொள்ளும் உள்ளக இடர்களை இனங்கண்டு விபரித்திருந்தனர் எனினும், சில பரீட்சார்த்திகளால் உதாரணங்களைக் குறிப்பிட இயலவில்லை.

பரீட்சார்த்திகள் கீழ்வரும் பாடப் பரப்புகளில் தங்களுடைய அறிவை மேம்படுத்திக்கொள்ள ஆலோசனை வழங்கப்படுகிறது :

- நிறுவனத்தின் உள்ளக மற்றும் வெளிவாரியான இடர்கள்.
- இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம்.
- இடர் குறைப்பில் பயன்படுத்தப்படும் நுட்பங்கள்.
- தகவல் தொழினுட்பத்தைப் பயன்படுத்தி இடர்களை இனங்காணுதல், அறிக்கையிடுதல் மற்றும் முகாமித்தல்.
- இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்தைப் பயன்படுத்தும்போது ஏற்படக்கூடிய வாய்ப்பு களும் இடர்களும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 03**

தரப்பட்ட விவரணத்திற்கான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலின் மூலகங்களை தொடர்புபடுத்துமாறு கேட்கப்பட்டது.

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலின் மூலகங்களை குறிப்பிட்டிருந்தனர் எனினும் அம்மூலகங்களை தரப்பட்ட விவரணத்துடன் தொடர்புபடுத்தவில்லை.

இது, உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் மற்றும் அதன் மூலகங்கள் பற்றி பரீட்சார்த்திகள் கொண்டுள்ள குறைந்தளவான புரிதலையே வெளிக்காட்டுகிறது.

பரீட்சார்த்திகளால் விடப்பட்ட சில தவறுகள் கீழே தரப்பட்டுள்ளன :

- **வரையறுக்கப்பட்ட SJ (தனியார்) கம்பனி** எதிர்கால பயனராகக் குறிப்பிடப்பட்டிருந்தது.
- சலுகைக் கடன் விடய நோக்கமாக ஏற்பிசைவு செய்யப்பட்டிருந்தது.
- கணக்காய்வாளர் அறிக்கை சான்றாக ஏற்பிசைவு செய்யப்பட்டது.

பரீட்சார்த்திகள் கீழ்வரும் பாடப் பரப்புகளில் தங்களுடைய அறிவை மேம்படுத்திக் கொள்ள ஆலோசனை வழங்கப்படுகிறது :

- உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் என்றால் என்ன?
- உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலின் நோக்கங்கள்.
- உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலின் மூலகங்கள்.
- உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலை ஏற்றுக்கொண்டு முகாமை செய்யும்போதான பிரதான அம்சங்களும் தேவைகளும்.
- தொடர்புடைய சேவைகள்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்திற்கும் குறைவாக இருந்தது.**

**வினா இல. 04**

இவ்வினா, நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வுத் தரத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

வினாவின் **பகுதி (a)** ஆனது, கணக்காய்வு நிறுவனமொன்றில் பணியாற்றும் நபர்களின் ஆற்றல்களை விருத்தி செய்கின்ற இரண்டு முறைகளை அடையாளம் காணுமாறு கேட்டிருந்தது. இது புள்ளிகளைப் பெறக்கூடிய இலகுவான வினாவாக இருந்த போதிலும் பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமாக அமையவில்லை. வினாவில் கேட்கப்பட்டதை விளங்கிக் கொள்ள பரீட்சார்த்திகளிடம் ஆற்றல் காணப்படாமை இதற்கான காரணமாக அமைந்திருக்கலாம். மாணவர்களால் வழங்கப்பட்ட சில சம்பந்தமற்ற விடைகள் கீழ்வருமாறு :

- வீட்டிலிருந்து வேலை செய்யும் உபாயத்தை நடைமுறைப்படுத்தல்
- செயலாற்றுகை மதிப்பீடு
- தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை நடைமுறைப்படுத்தல் போன்றவை.

இவ்வினாவின் **பகுதி (b)** ஆனது, நிறுவனமொன்று தாபித்துப் பேண வேண்டிய தரக் கட்டுப்பாட்டு முறைமையின் மூன்று மூலகங்களைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

போதிய அறிவைக் கொண்டிராத பரீட்சார்த்திகள் தரக் கட்டுப்பாட்டு முறைமையின் மூலகங்களுடன் தொடர்புடைய கொள்கைகள், செயன்முறைகள் மற்றும் நடைமுறைகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

உதாரணம் : மேற்பார்வை
மீளாய்வு
சுயாதீனம்
இரகசியத்தன்மை

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி B</u>

**வினா இல. 05**

இந்த வினா இடர் மதிப்பீடு மற்றும் கணக்காய்வுச் செயன்முறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பெருமளவான மாணவர்கள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர் எனினும் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. இது வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாமையால் ஏற்பட்டிருக்கலாம்.

எனவே, பரீட்சார்த்திகள் கீழ்வரும் பாடப் பரப்புகளில் போதுமானளவு கவனத்தைச் செலுத்துமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது :

- நிறுவனம் மற்றும் சூழலை விளங்கிக்கொள்ளுதல்.
- கணக்காய்வுப் பொருண்மை.
- கணக்காய்வு ஆவணப்படுத்தல்.
- மோசடி தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு.

**பகுதி (a)** இற்கு, மிகச் சில பரீட்சார்த்திகளே ''இடர் மதிப்பீட்டு நடைமுறை'' என்ற பதத்தைச் சரியாக விபரித்து புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

வினாவின் **பகுதி (b)** ஆனது, மூன்று இடர் மதிப்பீட்டு நடைமுறைகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டதுடன் பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்ட சில சம்பந்தமற்ற விடைகள் கீழே தரப்பட்டுள்ளன :

- இடரைக் குறைத்தல்
- இடரை மாற்றுதல்
- இடரைத் தவிர்த்தல்
- இடரை ஏற்றுக்கொள்ளல்

**பகுதி (c) (i)** ஆனது HPL தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டிய இரண்டு இடர் காரணிகளை குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.

**பகுதி (c) (ii)** ஆனது மோசடிகளைக் கண்டுபிடிப்பதற்கும் தடுப்பதற்குமான கணக்காய்வாளரின் பொறுப்பு பற்றி விபரிக்குமாறு கேட்டிருந்தது. செயலாற்றுகை மிகவும் மோசமாக இருந்தது.

மிகச் சில பரீட்சார்த்திகளே நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் வழுக்கள் காரணமாக பொருண்மை பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபாடுடையவை என கணக்காய்வாளர் நியாயமானளவு உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பிட்டிருந்தனர். எவ்வாறாயினும் அவர்கள் கணக்காய்வு ஒன்றின் உள்ளார்ந்த வரையறைகள் காரணமாக தவிர்க்க முடியாத இடர் பற்றி குறிப்பிட்டிருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 06

வினாவின் **பகுதி (a)** ஆனது தொழில்சார் சந்தேகம் மற்றும் தொழில்சார் தீர்ப்பு ஆகியவற்றுக் கிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் விபரமாக விளக்கியுமிருந்தனர். எவ்வாறாயினும், மிகச் சில பரீட்சார்த்திகள் வேறுபாட்டை மிகத் துல்லியமாகக் குறிப்பிட்டிருந்தனர். எனவே, பரீட்சார்த்திகள் ஒழுக்கநெறித் தேவைகள், தொழில்சார் சந்தேகம், தொழில்சார் தீர்ப்பு போன்ற கணக்காய்வு ஒன்றை ஆளுகை செய்கின்ற பொதுவான கோட்பாடுகள் பற்றிய நல்ல புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது.

வினாவின் **பகுதி (b)** ஆனது, ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பில் இரண்டு நிதிக் கூற்று வலியுறுத்தல்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. இது ஒரு நேரடி வினாவாக இருப்பதால் நேரடியான விடைகள் வழங்கப்படக்கூடியதாக இருந்தது. இருப்பினும், செயலாற்றுகை சராசரி மட்டத்திலேயே காணப்பட்டது.

பல பரீட்சார்த்திகள் கீழுள்ளவாறான சம்பந்தமற்ற விடைகளை வழங்கி, எவ்வித புள்ளிகளையும் பெற்றிருக்கவில்லை :

- சொத்துகளின் அகற்றல்
- தேய்மானம்
- மீள்மதிப்பீடு

வினாவின் **பகுதி (c)** ஆனது, கணக்காய்வாளரின் ஒட்டுமொத்த நோக்கத்தை விபரிக்குமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நோக்கத்தை விபரித்திருந்த போதிலும் கீழ்வரும் முக்கிய பதங்களைத் தவிர்த்திருந்தனர் :

- நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளல்
- நிதிக் கூற்றுக்களை முழுமையாகக் கவனத்திற் கொள்ளுதல்
- அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்துவதற்கான கணக்காய்வாளரின் இயலுமை
- பொருத்தமான நிதி அறிக்கையிடல் வேலைச் சட்டகம்
- SLAuSs இனால் தேவைப்படுத்தப்பட்டவாறான நிதிக் கூற்றுக்கள் மீதான அறிக்கை

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 07**

இந்த வினா ஏஅரீ அங்கத்தவர்கள் இணங்கி நடக்க வேண்டிய தொழில்சார் ஒழுக்கநெறிகளின் அடிப்படைக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

வினாவின் **பகுதி (a)** ஆனது தொழில்சார் ஒழுக்கநெறிகளின் மூன்று அடிப்படைக் கோட்பாடுகளை விபரிக்குமாறு கேட்டிருந்த அதேவேளை **பகுதி (b)** ஆனது ஒழுக்கநெறியின் அடிப்படைக் கோட்பாடுகளுடன் இணங்கி நடப்பதில் காணப்படும் இரண்டு அச்சுறுத்தல்களை உதாரணங்களுடன் விபரிக்குமாறும் கேட்டிருந்தது.

தொழில்சார் ஒழுக்கநெறிக் கோட்பாடுகள் பற்றிய போதிய அறிவைக் கொண்டிருந்த பரீட்சார்த்திகள் திருப்திகரமான அளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஏனைய பரீட்சார்த்திகள் கீழுள்ளவாறான சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர் :

**பகுதி (a)** - தலைமைத்துவத் திறன்கள்

- வயதெல்லை
- பாரிய பொறுப்புடைமை போன்றவை

**பகுதி (b)** - வெவ்வேறு கருத்துக்கள் காரணமான முரண்பாடுகள்

- விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறுதல்
- பொருண்மை பிறழ்கூற்றுக்களை உருவாக்குதல் போன்றவை.

மாணவர்கள் கீழ்வரும் பாடப் பரப்புகளில் போதிய அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென ஆலோசனை வழங்கப்படுகிறது :

- தொழில்சார் ஒழுக்கநெறிகளின் அடிப்படைக் கோட்பாடுகள்
- புதிய சேவைநாடுநர் ஒருவரை ஏற்றுக்கொள்வதில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்.
- அடிப்படைக் கோட்பாடுகளுடன் இணக்கமான அச்சுறுத்தல்கள்
- அச்சுறுத்தல்களை அகற்றுவதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள்
- கணக்காய்வாளரின் சுயாதீனத்தன்மை பற்றிய எண்ணக்கரு

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

## பகுதி C

**வினா இல. 08**

இந்த வினா விடய ஆய்வை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாவாகும். இங்கு உள்ளகக் கட்டுப்பாடுகள், வணிகச் செயன்முறைகள் மற்றும் IT கட்டுப்பாடுகள் மீதான அறிவு பரீட்சிக்கப்பட்டது. இங்கு பரீட்சார்த்திகள், உள்ளகக் கட்டுப்பாட்டை வரையறுத்து, தரப்பட்ட விவரணத்திலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களை இனங்காண்பதுடன் அந்தப் பலவீனங்களை வெற்றி கொள்வதற்கான பரிந்துரைகளைக் குறிப்பிடுவதைப் பரீட்சித்திருந்தது.

**பகுதி (a)**

இங்கு ''உள்ளகக் கட்டப்பாடு'' எனும் பதத்தை வரையறுக்குமாறு கேட்கப்பட்டது. கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இப்பதத்தைத் துல்லியமாக வரையறுத்திருந்தனர். இந்தப் பதம், கற்றல் புத்தகத்தில் தெளிவாக வரையறை செய்யப்பட்டிருந்தது. இது பரீட்சார்த்திகள் கற்றல் புத்தகத்தில் கவனம் செலுத்தி கற்கவில்லை என்பதையே காட்டுகிறது.

மாணவர்களால் அளிக்கப்பட்ட சில சம்பந்தமற்ற விடைகள் கீழ்வருமாறு :

- உள்ளகக் கட்டுப்பாடு ஒரு முகாமைச் செயன்முறையாகும்.
- மென்பொருள் முறைமையை விருத்தி செய்வதும் பேணுவதும் போன்றவை.

உள்ளகக் கட்டுப்பாடுகள் பற்றி வரையறை செய்யும்போது, மாணவர்கள் கீழ்வருவனவற்றை வலியுறுத்த வேண்டியிருந்தது :

1. உள்ளகக் கட்டுப்பாடு என்பது ஆளுகை பாரப்படுத்தப்பட்டோரால் நடைமுறைப்படுத்தப்பட்டு, பேணப்படுகின்ற ஒரு செயன்முறை ஆகும்.
2. உள்ளகக் கட்டுப்பாடுகளின் நோக்கங்கள். (நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை, செயற்பாடுகளின் பயனுறுதித்தன்மையும் வினைத்திறனும், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணக்கமான தன்மை)

**பகுதி (b) மற்றும் (c)**

**பகுதி (b)** ஆனது **வரையறுக்கப்பட்ட AB (தனியார்) கம்பனியின்** ஐந்து உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களை இனங்காணுமாறு கேட்டிருந்த அதே வேளை **பகுதி (c)** ஆனது மேற்படி பலவீனங்களை வெற்றிகொள்வதற்கான ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பரிந்துரைகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

சில மாணவர்கள் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களை அடையாளம் காணாது வினாவில் தரப்பட்ட தகவல்களை மீளவும் எழுதியிருந்தனர். இது, உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பில் போதிய அறிவின்மையைக் காட்டுகிறது.

தரப்பட்ட பரிந்துரைகளில், பெரும்பாலான மாணவர்கள் இனங்கண்ட பலவீனங்களைக் கவனத்தில் கொள்ளாது, கீழ்வருவன போன்ற பொது உள்ளகக் கட்டுப்பாடுகளைக் குறிப்பிட்டிருந்ததுடன் புள்ளிகள் எதனையும் பெற்றுக்கொ்ளவில்லை.

- கடமைகளைப் பிரித்தல்
- அதிகாரமளித்தலும் அங்கீகாரமளித்தலும்
- நிறுவனக் கட்டுப்பாடுகள், கணக்கீட்டுக் கட்டுப்பாடுகள் போன்றவை.

<u>**பகுதி (d)**</u>

**பகுதி (d)** ஆனது **வரையறுக்கப்பட்ட AB** தனியார் கம்பனியில் முறையாக வடிவமைக்கப்படாத நான்கு IT பொதுக் கட்டுப்பாடுகளை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணத்துடன் விபரிக்குமாறு கேட்டிருந்தது. இவ்வினாவுக்கு விடையளிப்பதற்கு, மாணவர்கள் பொது IT கட்டுப்பாடுகள் மீதான போதிய அறிவை கொண்டிருத்தல் வேண்டும்.

போதிய அறிவைக் கொண்டிருந்த மாணவர்கள் வினாவில் தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி முறையாக வடிவமைக்கப்படாத கட்டுப்பாடுகளை உதாரணங்களுடன் இனங்கண்டிருந்தனர். இருப்பினும், செயலாற்றுகை சராசரி மட்டத்திலேயே காணப்பட்டது.

<u>**பகுதி (e)**</u>

**பகுதி (e)** ஆனது COSO உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையிலுள்ள கட்டுப்பாட்டுச் சூழலின் நான்கு மூலகங்களை குறிப்பிடுமாறு கேட்டிருந்தது.

கற்றல் புத்தகமானது கட்டுப்பாட்டுச் சூழலின் ஏழு மூலகங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. இருப்பினும், செயலாற்றுகை மிகவும் மோசமாகக் காணப்பட்டது. சில மாணவர்கள் கீழ்வருவன போன்ற சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்:

- செயற்பாடு சார்ந்த கட்டுப்பாட்டு முறைமை
- துப்பறியும் கட்டுப்பாட்டு முறைமை
- வழிகாட்டுதல்
- கட்டுப்பாட்டுப் பகுப்பாய்வு

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 09**

<u>**பகுதி (a)**</u>

இந்தப் பகுதி, ஷாம் கம்பனியின் கணக்காய்வு நடைமுறைகளை ஆற்றும்போது விசேட கவனம் செலுத்த வேண்டிய ஐந்து பகுதிகளை இனங்காணுமாறு கேட்டிருந்தது.

வினாவில் தரப்பட்ட தகவல்களில் பத்திற்கும் மேற்பட்ட பகுதிகள் காணப்பட்டதால் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.

வெற்றிகரமாக விடையளிக்காத பரீட்சார்த்திகள் கீழ்வருவன போன்ற சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

- நிதிப் பகுதி
- செயற்பாட்டுப் பகுதி
- பொருண்மைப் பகுதி

<u>**பகுதி (b)**</u>

கணக்காய்வுப் பொருண்மையைத் தீர்மானிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய நான்கு காரணிகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இது ஒரு கோட்பாட்டு ரீதியான வினாவாக இருப்பதுடன் பொருண்மை மீதான தொழினுட்ப அறிவு பரீட்சிக்கப்பட்டது. செயலாற்றுகை மிகவும் மோசமானதாக இருந்தது. ஒரு கையளவு பரீட்சார்த்திகள் மாத்திரமே இந்தப் பகுதிக்குப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

## பகுதி (c)

இந்தப் பகுதி, ஷாம் கம்பனியின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது தொடர்ந்தியங்கும் என்ற கருதுகோளின் பொருத்தத்தன்மையை ஆராயுமாறு கேட்டிருந்தது. செயலாற்றுகை சராசரி மட்டத்திற்கும் குறைவாகவே இருந்தது. சில மாணவர்கள் தொடர்ந்தியங்கும் என்ற கருதுகோளை பொதுவான முறையில் ஆராய்ந்திருந்த போதிலும் ஷாம் கம்பனியின் நிச்சயமற்ற தன்மையை கவனத்தில் கொள்ளவில்லை. மிகச் சில மாணவர்கள் தொடர்ந்தியங்கும் என்ற கருதுகோளைத் தொடர்வதற்கான நிறுவனத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கு முகாமையின் பொறுப்பினைக் குறிப்பிட்டிருந்தனர்.

மாணவர்கள் கீழ்வரும் பாடப் பரப்புகளில் போதிய அறிவைப் பெற ஆலோசனை வழங்கப்படுகிறது.

- தொடர்ந்தியங்கும் என்ற கருதுகோள்
- தொடர்ந்தியங்குதல் பற்றிய சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள்
- தொடர்ந்தியங்குவதற்கான முகாமையின் பொறுப்பு
- தொடர்ந்தியங்குதல் தொடர்பான கணக்காய்வு நடைமுறைகளின் மீளாய்வுகள்
- கணக்காய்வாளரின் அறிக்கையிடல்

## பகுதி (d)

கணக்காய்வு அபிப்பிராயத்தின் மீது வினாவில் தரப்பட்ட விடயங்களின் தாக்கத்தை மதிப்பிடுமாறு இந்தப் பகுதியில் கேட்கப்பட்டது.

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.

சில பரீட்சார்த்திகள் தாக்கத்தை அளவிட்டிருந்த போதிலும் அதனை பொருண்மை மட்டத்துடன் மதிப்பீடு செய்யவில்லை. மிகச் சில பரீட்சார்த்திகள் விடயங்களின் மொத்தத் தாக்கம் பொருண்மையானது எனவும் முகாமையானது சீராக்கத்திற்கு இணங்கவில்லை எனின், கணக்காய்வாளர் அபிப்பிராயத்தை மாற்ற வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

மாணவர்கள் கீழ்வரும் பாடப்பரப்புகளில் தமது அறிவை மேம்படுத்த ஆலோசனை வழங்கப்படுகிறது:

- பிறழ்கூற்றுகளின் தாக்கத்தை அளவிடுதல்
- பொருண்மையுடன் மதிப்பிடுதல்
- துல்லியமாக அறிக்கையிடல் (கணக்காய்வாளர் அறிக்கையை திருத்துதுல்)

## பகுதி (e)

இந்தப் பகுதியில் கணக்காய்வாளர் அபிப்பிராயத்தை மாற்றுகின்ற இரண்டு சந்தர்ப்பங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது. கணக்காய்வாளரின் அபிப்பிராயத்தை மாற்றுகின்ற சந்தர்ப்பங்கள் எவை என்பது பற்றி கற்றல் புத்தகத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்திற்கும் குறைவாக இருந்தது.**

\- - -

**<u>பரீட்சையில் செயலாற்றுகையை மேம்படுத்தும் பொருட்டு பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டத்தை உயர்த்துவதற்கான பரிந்துரைகள்</u>:**

(1) பரீட்சார்த்திகள் பாடப் புத்தகத்தைப் படித்து, அதன் உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

(2) இந்தப் பாடத்துடன் சம்பந்தப்பட்ட கட்டுரைகள், சஞ்சிகைகளை வாசிப்பதுடன் கணக்காய்வுடன் தொடர்புடைய வேறு விடயங்களையும் வாசித்தறிதல் வேண்டும்.

(3) பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொற்களின் வரைவிலக்கணங்களை விளங்கிக் கொள்வதுடன், வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டுள்ள செயல் வினைச் சொல் நிரலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பயிற்சி பெறுதலும் வேண்டும்.

(4) கடந்த கால வினாத்தாள்களின் உள்ளடக்கங்களைக் கற்பதுடன், குறைந்தது கடந்த 2 – 3 ஆண்டுகளின் நடைபெற்ற பரீட்சைகளின் வினாத்தாள்களைச் செய்து பார்த்து வினாக்கள் அமைக்கப்பட்டுள்ள விதம் பற்றி விளங்கிக்கொள்ள முயற்சித்தல் வேண்டும்.

(5) பரீட்சார்த்திகள் வினாத்தாள்களில் தரப்பட்டுள்ள கோட்பாடுகள் மற்றும் பரீட்சையில் அதனைப் பிரயோகிப்பது பற்றிய பரீட்சகரின் எதிர்பார்ப்பு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புடைமையை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

(6) கடந்தகால வினாத்தாள்களில் பாடப் புத்தகத்திலுள்ள எந்தப் பகுதி பரீட்சிக்கப்பட்டுள்ளதோ அத்தகைய பகுதிகளை சிறு குறிப்புகளாக எழுதிக்கொண்டு படித்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(7) பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்காக வழங்கப்பட்ட நேரத்தை அடிப்படையாகக் கொண்டு கடந்த கால வினாக்களுக்கு விடையளித்துப் பயிற்சி எடுத்தல் வேண்டும். இது பரீட்சையின்போது நேர முகாமைத்துவத்தை மேம்படுத்த உதவும்.

(8) பாடப் புத்தகத்தில் தரப்பட்ட ஒவ்வொரு பாட அத்தியாயத்திலிருந்தும் சிறு குறிப்புகளை எழுதிக் கொள்வதுடன் நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாடத்திட்டத்தின் உள்ளடக்கங்களை நினைவில் வைத்திருப்பதற்காக அவற்றைப் படிக்கவும்.

(9) பரீட்சார்த்திகள் விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுதல் வேண்டும்.

(10) பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு முன், அதில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும்.

(11) பரீட்சார்த்திகள், வினாவை விளங்கிக்கொள்வதற்கும் வினாவில் கேட்கப்பட்டதற்கு பொருத்தமானதும் துல்லியமானதுமான விடைகளை வழங்குவதற்குமாக பரீட்சையின்போது தமது மனநிலையை தெளிவாகவும் சமநிலையாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

(12) பரீட்சார்த்திகள் வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு அவ்வினாவுக்கு விடையளிப்பதற்கான நேரத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதுடன், வினாத்தாளில் தரப்பட்ட சகல வினாக்களுக்கும் பயனுறுதிமிக்க வகையில் விடையளிப்பதற்கான இயலுமையுடன் இருத்தல் வேண்டும்.

(13) விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன், கேட்கப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கப்பட்டுள்ளதா, பொருத்தமானவாறு இலக்கமிடப்பட்டுள்ளதா என்பதை இருமுறை பரீட்சித்துக் கொள்ளவும்.

- * * * -